**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,**

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 07 ஆம் நாள் செவ்வாய்கிழமை

**இ.ம.எண்.04/2026**

IN

**அசல் வழக்கு எண்.379/2012**

ராமலட்சுமி .... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. தமிழ்நாடு அரசு அதன் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர், திருநெல்வேலி மூலம்
2. கோட்டாட்சித் தலைவர், கோட்டாட்சித்தலைவர் அலுவலகம், திருநெல்வேலி.
3. வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், திருவேங்கடம் சாலை, சங்கரன்கோவில்.
4. நம்பித்தேவர் (இறந்தவர்)
5. தமிழ்செல்வி
6. விஜயகுமார்
7. சசிகலா
8. மகேந்திரன்
9. இசக்கியம்மாள்
10. காசித்தாய்
11. அனிதா
12. அருண்குமார்
13. மாரிராஜா
14. பாக்கியலட்சுமி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது 26.03.2026 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.S.S.பிரதாப்ராஜ் அவர்கள் ஆஜராகியும், 1

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.04.07 18:36:23 +0530

முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.ஜெயக்குமார் அவர்கள் ஆஜராகியும், 4ம் எதிர்மனுதாரர் காலம்சென்றுவிட்ட நிலையிலும், 5, 7, 9 முதல் 14 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.ரவிசங்கர் அவர்கள் ஆஜராகியும், 6, 8 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் தோன்றாத் தரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், இம்மனுவை பொறுத்தும் தோன்றாத்தரப்பினர்களாக கருதப்பட்டும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவிற்கு No Counter என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ள நிலையிலும், மனு, 5, 7, 9 முதல் 14 எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரை மற்றும் அசல் வழக்கு கோப்பினை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## உத்தரவு

மனுதாரர்/வாதியால் இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 7 விதி 14(3)–ன் கீழ், இவ்வழக்கில் பிராது பாரா 3ல் குறிப்பிட்டுள்ள 21.03.1973 தேதிய உயில் ஆவணத்தின் சார்பதிவாளர் நகலை வா.சா.1 ஆக மனுதாரர் கூடுதல் சாட்சியம் அளிப்பதில் தாக்கல் செய்து கொள்ளும் வகைக்கு மேற்படி ஆவணத்தை முன்னமே தாக்கல் செய்யாததினால் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து அங்கீகரித்துக்கொள்ள உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 1) மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்:–

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், இவ்வழக்கை பிராதின் தபசில் சொத்தை பொறுத்து எதிர்மனுதாரர்கள் மீது விளம்புகை மற்றும் நிரந்தர ஏவுகட்டளையும் மற்றும் 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் மீது வலியுறுத்துக் கட்டளை பரிகாரங்களும் கோரி தாக்கல் செய்துள்ளதாகவும், இவ்வழக்கு முழு விசாரணைக்கு பின்பு 13.02.2015 தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், மேற்படி தீர்ப்பின் மீது சங்கரன்கோவில் சார்பு

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.04.07 18:36:30 +0530

நீதிமன்றத்தில் A.S.No.29/2015 மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டு 4 முதல் 14 பிரதிவாதிகள் வாரிசுகள் நிலையில் கட்சி சேர்க்கப்பட்டு, பிரதான மேல்முறையீட்டு வழக்கில் இருதரப்பு விசாரணைக்கு பின்பு 05.08.2025 தேதியில் இந்நீதிமன்றத்திற்கு இவ்வழக்கை திருப்பியுள்ளதன்படி, மனுதாரர் தரப்பில் கூடுதல் சாட்சியத்தில் பிராதின் 3 வது பாராவில் குறிப்பிட்டுள்ள 21.03.1973 தேதிய உயில் ஆவணத்தின் சார்பதிவாளர் நகல் இதன் மனுவுடன் தாக்கல் செய்துள்ளதை முன்னமே தாக்கல் செய்யாததால் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து ரிசிவ் செய்து கொள்ள வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் இருக்கிறது என்றும், இல்லாதுபோனால் மனுதாரருக்கு மிகுந்த கஷ்ட, நஷ்டம் ஏற்பட்டுவிடக் கூடியதாக இருக்கிறது என்றும், பிராதின் 3 வது பாராவில் குறிப்பிட்டுள்ள 21.03.1973 தேதிய உயில் ஆவணத்தை முந்தைய விசாரணையில் தாக்கல் செய்யப்படவில்லை என்ற விபரம் தற்போதுதான் மனுதாரருக்கு தெரியவந்தவுடன், தற்போது உயிலின் சார்பதிவாளர் நகல் எடுத்து இத்துடன் தாக்கல் செய்துள்ளதை, வா.சா.1 ஆக மனுதாரர் கூடுதல் சாட்சியம் அளிப்பதில் மனுதாரர் தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்து தாக்கல் செய்து மனுதாரர் கட்சியை நிரூபித்துக்கொள்ள வேண்டியது அவசியமாய் இருக்கிறது என்றும், மேற்படி ஆவணத்தை மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்து கொள்ளும் வகைக்கு மேற்படி ஆவணத்தை ரிசிவ் செய்து கொள்ள இந்நீதிமன்றம் அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு யாதொரு கஷ்ட, நஷ்டமும் ஏற்படக்கூடியதில்லை என்றும், மேற்படி 21.03.1973 தேதிய பதிவு அசல் உயில் ஆவணம் வெகுகாலத்திற்கு முந்தைய ஆவணம் என்றும், மேற்படி அசல் உயில் ஆவணம் வைத்த இடம் தெரியாததினாலும், தேடிப்பார்த்து கிடைக்காத காரணத்தினாலும் சார் பதிவாளர் அலுவலக நகல் எடுத்து தாக்கல் செய்வதாகவும், ஆகையால், இவ்வழக்கில் பிராது பாரா 3 ல் குறிப்பிட்டுள்ள 21.03.1973 தேதிய உயில் ஆவணத்தின் சார்பதிவாளர் நகலை வா.சா.1 ஆக மனுதாரர் கூடுதல் சாட்சியம் அளிப்பதில் தாக்கல் செய்து கொள்ளும் வகைக்கு மேற்படி ஆவணத்தை முன்னமே தாக்கல் செய்யாததினால் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து அங்கீகரித்துக்கொள்ள உத்தரவிடக்கோரி

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.04.07 18:36:37 +0530

இம்மனு மனுதாரர்/வாதி தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>12 ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 5, 7, 9, 10, 11, 13 மற்றும் 14 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>**-

மனுதாரரின் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல என்றும், உயிலை குறியீடு செய்ய உயில் ஆவணத்தின் உரிமை உள்ளவராக அல்லது பயன் (Beneficiary) பெற்றவராக இருக்க வேண்டும் என்றும், மேலும், மேற்படி உயில் ஆவணத்தை நிரூபணம் செய்ய சட்டப்படி தகுதியானவராக (Competent Witness) ஆக இருக்க வேண்டும் என்பது எழுதப்பட்ட சட்டவிதி என்றும், மனுதாரர் பிரஸ்தாபிக்கும் 21.03.1973 ம் தேதிய உயில் ஆவணத்தை எழுதிக் கொடுத்ததாக கூறும் முத்தையாத்தேவருக்கோ அல்லது அதை எழுதிப் பெற்றதாக கூறும் பெரியசாமித்தேவர், மாரிராஜாத் தேவருக்கோ மேற்படி உயிலில் கண்ட சொத்துக்களில் எவ்வித உரிமையுமில்லாத நிலைமையில், மேற்படி உயில் ஆவணம் பாத்தியமில்லாத நபர்களால் உற்பத்தி செய்யப்பட்ட மோசடியான ஆவணமாகும் என்றும், மேற்படி உயில் ஆவணத்தை அனுசரித்து பெரியசாமித்தேவர், மாரிராஜாத் தேவர் ஆகியோர்கள் பெயரில் வருவாய் துறையில் எவ்வித பட்டா பெயர் மாற்றமும் ஏற்படவில்லை என்றும், மேலும், மேற்படி உயில் ஆவணத்தை எழுதிப் பெற்ற பெரியசாமித்தேவர், மாரிராஜாத் தேவர் ஆகியோர்கள் இவ்வழக்கில் கட்சியும் கிடையாது என்றும், மேலும் உயில் ஆவணம் எழுதிக் கொடுத்தவரால் அல்லது எழுதிப் பெற்றவர்களால் (Beneficiary) மட்டுமே நீதிமன்றத்தில் குறியீடு செய்ய முடியும் என்றும், மனுதாரருக்கு மேற்படி ஆவணத்தை குறியீடு செய்ய எவ்வித Locus Standi–யும் கிடையாது என்றும், மனுதாரர்/வாதி வழக்கின் விசாரணையின்போது பின்னினைவாக மேற்படி உயிலை தாக்கல் செய்துள்ள நிலையில் ஆர்டர் 7 ரூல் 14(3) சி.பி.சி.–யின் படி தான் தாக்கல் செய்ய வேண்டும் என்றும், ஆனால், மனுதாரர் மேற்படி உயில் ஆவணத்தை பிராதுடன் தாக்கல் செய்யாமல் தற்போது ஆர்டர் 7 ரூல் 14(1) சி.பி.சி.–யின்படி தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள சட்டப்பிரிவே தவறானது என்றும், மனுதாரருக்கு

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.04.07 18:36:45 +0530

இவ்வழக்கில் எவ்வித கட்சியும் கிடையாது என்று தெரிந்திருந்தும் இவ்வழக்கை காலம் கடத்தி எதிர்மனுதாரர்களை கஷ்ட–நஷ்டப்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில், மேற்படி பாத்தியமில்லாத நபர்களால் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட மேற்படி உயில் ஆவணத்தை வழக்கு தாக்கல் செய்ய காலமான 2013 ம் வருட காலத்திலேயே பிராதுடன் தாக்கல் செய்யாமல், மேற்படி வழக்கை இந்நீதிமன்றம் தள்ளுபடி செய்த பின்னர், அப்பீல் வழக்கு தாக்கல் செய்து, மேற்படி அப்பீல் வழக்கு ரிமாண்ட் செய்யப்பட்ட பின்னர் தற்போது ஏதோ மேற்படி உயில் ஆவணம் வைத்த இடம் தெரியாததால் தற்போது மேற்படி உயில் ஆவணத்தின் நகல் தாக்கல் செய்துள்ளது போல பிரஸ்தாபித்து காலபிற்பாடாக மேற்படி உயில் ஆவணத்தை குறியீடு செய்ய தாக்கல் செய்துள்ளார் என்றும், மேலும், மனுதாரரின் இம்மனு அனுமதிக்கப்பட்டால் மனுதாரர் அடையும் பலாபலன்களை விட எதிர்மனுதாரர்கள் அடையும் கஷ்ட–நஷ்டங்களே மேலானதாக இருக்கும் என்றும், எனவே மனுதாரர்களின் மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று 5, 7, 9 முதல் 14 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, 5, 7, 9 முதல் 14 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை, அசல் வழக்கு கோப்பு மற்றும் இருதரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) அசல் வழக்கானது வாதியால் பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் வலியுறுத்துக் கட்டளை பரிகாரங்கள் கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) மனுதாரர்/வாதியால் இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணத்தை நீதிமன்றத்தில் விரைந்து தாக்கல் செய்யாமல் காலதாமதமாக தற்பொழுது அசல் வழக்கில் கூடுதல் ஆவணமாக ஏற்றுக்கொள்ளக்கோரி

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.04.07 18:36:52 +0530

தாக்கல் செய்யப்பட்டிருப்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

7) மனுதாரரால் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணத்தை விரைந்து தாக்கல் செய்யாததற்கு ஏற்பட்ட காலதாமதத்தை நிரூபணம் செய்யும் வகையில் எவ்வித சாட்சிய, சான்றாவணங்களையும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. ஆகையால், மனுதாரரால் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள காலதாமதத்திற்கான காரணம் இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை.

8) மேலும், இம்மனுவின் 5, 7, 9 முதல் 14 எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர் பிரஸ்தாபிக்கும் 21.03.1973 ம் தேதிய உயில் ஆவணத்தை எழுதிக் கொடுத்ததாக கூறும் முத்தையாத்தேவருக்கோ அல்லது அதை எழுதிப் பெற்றதாக கூறும் பெரியசாமித்தேவர், மாரிராஜாத் தேவருக்கோ மேற்படி உயிலில் கண்ட சொத்துக்களில் எவ்வித உரிமையுமில்லாத நிலைமையில், மேற்படி உயில் ஆவணம் பாத்தியமில்லாத நபர்களால் உற்பத்தி செய்யப்பட்ட மோசடியான ஆவணமாகும் என்றும், மேற்படி உயில் ஆவணத்தை அனுசரித்து பெரியசாமித்தேவர், மாரிராஜாத் தேவர் ஆகியோர்கள் பெயரில் வருவாய் துறையில் எவ்வித பட்டா பெயர் மாற்றமும் ஏற்படவில்லை என்றும், மேலும், மேற்படி உயில் ஆவணத்தை எழுதிப் பெற்ற பெரியசாமித்தேவர், மாரிராஜாத் தேவர் ஆகியோர்கள் இவ்வழக்கில் கட்சியும் கிடையாது என்றும், மேலும் உயில் ஆவணம் எழுதிக் கொடுத்தவரால் அல்லது எழுதிப் பெற்றவர்களால் (Beneficiary) மட்டுமே நீதிமன்றத்தில் குறியீடு செய்ய முடியும் என்றும், மனுதாரருக்கு மேற்படி ஆவணத்தை குறியீடு செய்ய எவ்வித Locus Standi–யும் கிடையாது என்றும், மனுதாரர்/வாதி வழக்கின் விசாரணையின்போது பின்னினைவாக மேற்படி உயிலை தாக்கல் செய்துள்ள நிலையில் ஆர்டர் 7 ரூல் 14(3) சி.பி.சி.–யின் படி தான் தாக்கல் செய்ய வேண்டும் என்றும், ஆனால், மனுதாரர் மேற்படி உயில் ஆவணத்தை

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.04.07 18:37:00 +0530

பிராதுடன் தாக்கல் செய்யாமல் தற்போது ஆர்டர் 7 ரூல் 14(1) சி.பி.சி.–யின்படி தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள சட்டப்பிரிவே தவறானது என்றும், மனுதாரருக்கு இவ்வழக்கில் எவ்வித கட்சியும் கிடையாது என்று தெரிந்திருந்தும் இவ்வழக்கை காலம் கடத்தி எதிர்மனுதாரர்களை கஷ்ட–நஷ்டப்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில், மேற்படி பாத்தியமில்லாத நபர்களால் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட மேற்படி உயில் ஆவணத்தை வழக்கு தாக்கல் செய்ய காலமான 2013ம் வருட காலத்திலேயே பிராதுடன் தாக்கல் செய்யாமல், மேற்படி வழக்கை இந்நீதிமன்றம் தள்ளுபடி செய்த பின்னர், அப்பீல் வழக்கு தாக்கல் செய்து, மேற்படி அப்பீல் வழக்கு ரிமாண்ட் செய்யப்பட்ட பின்னர் தற்போது ஏதோ மேற்படி உயில் ஆவணம் வைத்த இடம் தெரியாததால் தற்போது மேற்படி உயில் ஆவணத்தின் நகல் தாக்கல் செய்துள்ளது போல பிரஸ்தாபித்து காலபிற்பாடாக மேற்படி உயில் ஆவணத்தை குறியீடு செய்ய தாக்கல் செய்துள்ளார் என இம்மனுவுக்கு ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

9) இருப்பினும், அசல் வழக்கானது வாதி தரப்பு கூடுதல் சாட்சி விசாரணைக்காக நிலுவையில் இருப்பதால் மனுதாரரால் இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணம் இவ்வழக்கிற்கு சிறந்த நீதிமுறை தீர்மானிப்பிற்கு அவசியமானது என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், மனுதாரரால் இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ள ஆட்சேபணைகள் குறித்து ஆவணம் குறியீடு செய்யப்படும் சமயத்திலோ அல்லது தீர்ப்புரை பகரப்படும்போது இந்நீதிமன்றத்தால் பரிசீலிக்கக்கூடியதாகும். தற்போது, இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணத்தை இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்வதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்விட கஷ்ட, நஷ்டமும் ஏற்படப்போவதில்லை.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.04.07 18:37:08 +0530

10) ஆகையால், மனுதாரர் தரப்பில் இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணமானது நிரூபணம் மற்றும் தொடர்புடைமைக்குட்பட்டு இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

11) எனவே, மேற்கண்ட பரிசீலனையிலிருந்து இம்மனுவானது நீதியின் நலன் கருதி நிபந்தனை செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படத்தக்கது என்று இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்படுகிறது.

**12) இறுதியாக**

இம்மனுவானது இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணத்தின் நிரூபணம் மற்றும் தொடர்புடைமைக்குட்பட்டு (Subject to Proof and Relevancy) ஆவணம் ஏற்றுக்கொள்ளப்பட்டு ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) நிபந்தனை செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர் மேற்படி தொகையினை 5, 7, 9 முதல் 14 எதிர்மனுதாரர்களுக்கு நேரடியாக 08.04.2026 ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 08.04.2026.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 07 ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.04.07 18:37:16 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**<u>இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் </u>:–**

**– இல்லை –**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.04.07 18:37:22 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சங்கரன்கோவில்.**

**மு.மா.உ. நீதிமன்றம்,**
**சங்கரன்கோவில்,**

I.A.No.04/2026
in
O.S.No.379/2012

**உத்தரவு (Draft / Fair)**
**நாள் : 07.04.2026**